# தொண்டா-செல்லசாமி மோதல் மீண்டும் ஆரம்பம்;


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 2 இதழ் 64
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15-4-1994


## இ. தொ. கா. பிளவுபடும்?

(கொழும்பு)
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமானுக்கும் இ. தொ. கா. பொதுச்செயலாளர் எம். எஸ் செல்லசாமிக்கும் இடையில் மீண்டும் ஒரு மோதல் இப்போது ஆரம்பித்துள்ளது.

[4-ம் பக்கம் பார்க்க]

## திருமலை மாவட்டத்தில் விமானத்தாக்குதல்

(திருமலை)
திருமலை மாவட்டத்தில் விமானப்படையினர் பல இடங்களில் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.
திருமலை மாவட்டத்திலுள்ள பன்மதவாச்சி விமானப் படை முகாமைச்சேர்ந்த இரு

4 ம் பக்கம் பார்க்க)

## தமிழர் கைது

(திருமலை)
திருமலை மாவட்டத்தில் இராணுவத்தினர் பத்து தமிழர்களை நேற்று கைதுசெய்து முகாமுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.
திருமலை மாவட்டத்தில் உள்ள வெருகல் முகத்துவாரம் பகுதியை இராணுவத்தினர்

(4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தைப் பலப்படுத்தி

# இனப்பிரச்னைக்கு போர் மூலம் தீர்வுகாண ஜனாதிபதி திட்டம்!

## வெளிநாடுகளில் அவசர ஆயுதக் கொள்வனவு!!

(லண்டன்)
இலங்கையின் இனப்பிரச்னைக்கு போர்மூலமே தீர்வுகாண ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா திட்டமிட்டுள்ளார், அதற்கென இராணுவத்தைப் பலப்படுத்துவதற்கு படை அதிகாரிகள் மூலம் அவர் நடவடிக்கைகள் எடுத்துள்ளார். இதன் பொருட்டு கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக இராணுவ அதிகாரிகளைக்கொண்ட இரண்டு குழுக்களையும் அவர் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்துள்ளார் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

(4-ம் பக்கம் பார்க்க)

## புது வருட நள்ளிரவில் காரைநகரிலிருந்து ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)
காரைநகர் கடற்படைமுகாமிலிருந்து நேற்று அதிகாலை 12.30 மணியளவில் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.
பொன்னாலை பெரியகுளம் பகுதியில் இச் ஷெல்கள் விழுந்து வெடித்தன.
புதுவருடப்பிறப்பு நேரம் இடம்பெற்ற இத்தாக்குதலினால் பதற்றமடைந்த மக்கள் அச்சத்துடன் இரவைக் கழித்தனர். (இ)

## இலங்கையில சமாதானம் ஏற்பட

## ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு உதவி வழங்க விருப்பம்

(லண்டன்)
"இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு நாம் எப்போதும் உதவி புரிவதற்கு ஆயத்தமாக இருக்கிறோம்" என்று ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவினர் இலங்கை நாடாளுமன்ற குழுவினரிடம் இவ் தெரிவித்துள்ளதாக இந்த நாடாளுமன்ற சமய கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி. பி. தேவ

(4-ம் பக்கம் பார்க்க

## வடஈராக்கில் ஹெலிமீதுசூடு 20 பேர் உயிரிழப்பு

(லண்டன்)
வட ஈராக்கில், இரு அமெரிக்க ஹெலிகொப்டர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன; இதில் பயணம் செய்த பிரிட்டிஷ், அமெரிக்க, பிரான்ஸ் அதிகாரிகள், விமானச்சிப்பந்திகள் உட்பட மொத்தம் இருபது பேர் இறந்துவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.
இந்த இரு ஹெலிகளையும்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தேர்தலில் சிறிமா போட்டியிட கோரிக்கை

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்கா போட்டியிடவேண்டுமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மத்திய குழுவைக் கேட்டுள்ளனர்.
இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தலுக்கு நிறுத்தும் வேட்பாளரைப் பொறுத்து ஒரு முடிவு

(4-ம் பக்கம் பார்க்க)

## நரோமா பயணிகள் பயண கட்டணத்தை செலுத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
நரோமா கப்பலில் இம் மாதம் 21ம் திகதி வியாழக்கிழமை பயணத்தை மேற்கொள்வதற்குப் பதிவுசெய்த பயணிகள் பயணக்கட்டணமான 500 ரூபாவை 16ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக யாழ். மாவட்டச் செயலகத்தில் செலுத்தி தமது பயணத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.
பயணத்தை உறுதிப்படுத்த தவறும் பயணிகள் தமது பயணத்தை மேற்கொள்ளமுடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். 162-இ

## புலிகள் சம்பந்தமான அறிக்கை தமிழகத்திலிருந்து கிடைக்கவில்லை

(சென்னை)
விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் நீடிப்பது குறித்து விபர அறிக்கை எதுவும் தமிழக அரசிடமிருந்து இதுவரை தமக்குக் கிடைக்கவில்லையென மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.
நேற்று காலை சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப்புலிகள் உட்பட தமிழகத்தில் இயங்கும் அனைத்து அமைப்புக்கும் பாகிஸ்தானின் உளவுப்படை நிறுவனத்திற்கு தொடர்பு

(4-ம் பக்கம் பார்க்க)

## சேவைக்கால கல்வி ஆலோசகர் பதவி

(யாழ்ப்பாணம்)
முறைசாராக்கல்வி சேவைக்கால கல்வி ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.
மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது

(4-ம் பக்கம் பார்க்க)

## நடவடிக்கைகள் உன்னிப்பாக அவதானிப்பு

(சென்னை)
தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை மத்திய அரசு உன்னிப்பாக அவதானித்து வருகிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.
நேற்று காஞ்சிபுரத்தில்

(0-ம் பக்கம் பார்க்க)

## ஆங்கில ஆசிரியர் பதவிக்கு 7500பேர் விண்ணப்பம்

(கொழும்பு)
ஆங்கில ஆசிரியர் பதவிகளுக்கு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட 7500 பேர் விண்ணப்பித்துள்ளார்கள்.
இவர்களில் 96 பேர் ஏற்கனவே ஓரளவு பயிற்சியைப் பெற்ற பின்னர் மேலும் பயிற்சிக்காக விசேட நிலையங்க

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### இந்து சமயம்

கடந்தகால இந்துசமய (5 வருட) வினாத்தாள்களின் தொகுப்பு சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகிறது. விலை ரூபா 20/- (இ-946)

### விற்பனைக்கு

கோழி, வான் கோழி முட்டைகளும், கோழிக் குஞ்சுகளும், வான் கோழிகளும் தொகையாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- கோழிப் பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி. (ஏ 3987)

### புத்தாண்டுப் பலன்களும் ராகு கேது மாற்றமும்

1994/95 பவ வருஷ பலன்கள், கைவிஷேம், எல்லா ராசிகளின் பலன்கள் ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றது. பாடசாலை உபகரணங்களுக்கு சேவிதா, யாழ்ப்பாணம். (இ-956)


உல்லாச பயணிகளுக்கு

## பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு பேசதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்று உல்லாசப் பயணத் துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் அறிவித்துள்ளார்.

அமைச்சர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்; கொழும்பு குண்டு வெடிப்புச் சம்பவங்களினால் உல்லாசப் பயணிகளின் வருகை பாதிக்கப்படாது. இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு இனிமேல் பேசதிய பாதுகாப்பு வழங்கப்படும்.

அத்துடன் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இருக்கும் உல்லாச பயணிகள் விடுதிகளுக்கும் இனிமேல் பேசதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் கூறினார். ([illegible])


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்!

17-3-94 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தெய்வம்

### அமரர் கதிர்காமு கந்தையா
(முன்னாள் ஏழாலை கிராமசபை உப தலைவர்)

அவர்களின்

வீட்டுக்கிருத்தியம் 16-4-94 சனிக்கிழமை காலை 10-00 மணி முதல் 12-00 மணி வரை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

தகவல்; க. மயூரன்

தேவி தோட்டம்,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்

(ஏ-3997)



## வேலை வாய்ப்பு

தகுதியுடையவர்களிடம் இருந்து பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### 1. Trainees Accounts Clerk

அ. வயது: ஆகக் கூடியது 24. ஆண் / பெண் இரு பாலாரும்.

ஆ. தகைமை: க.பொ.த. (உ/த) சித்தி. அத்துடன் க. பொ. த. (சா/த) கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.

இ. மேலதிக தகைமை: கணக்கியல் துறை சார்ந்த உயர் கல்வி (A.A.T., N.C.A.T., I.A.B.) பயின்றவர்களின் தகைமை.

### 2. Sale Representative (விற்பனைப் பிரதிநிதி)

அ. வயது: ஆகக்கூடியது 24, ஆண்.

ஆ. கல்வித் தகைமை: க. பொ. த. (உ/த) சித்தி. க.பொ.த. (சா/த) கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி.

இ. சுறுசுறுப்பாக செயற்படக்கூடியவராக இருத்தல் வேண்டும். வேதனம் ஊக்கத்துடன் தொடர்புடையதாக இருக்கும்.

22-04-1994 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்:

இயக்குனர்

**TASTE LINE INDUSTRIES (Pvt.) Ltd,**
14, Seenier Lane, Jaffna.

(ஏ-3995)



# PATRICIAN INSTITUTES

FOR SCHOOL SOCIETY AND THE ASSOCIATION — O.B.A — S.P.C — PRO VERITATE ET JUSTITIA

# பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள், புதிய பிரிவுகள் 20-04-94 புதன்கிழமை அன்று ஆரம்பமாகின்றன.

## 1. Computer Processing Courses

**I. Beginners Computer Studies**
★ Introduction to Computers, DOS, Programming in BASIC Language
Duration: 4 Months

**II, Advanced Computer Studies:**
★ DOS Programming in BASIC Language, Word Processing
Advanced BASIC Duration 6 Months

**III: Diploma in Computor Studies**
★ DOS Progromming in BASIC Language, Word Processing, Systems analysis and Design, Lotus 1-2-3,
Duration; 9 Months

★ Lectures by: S R. Logendra (D. C. A), (Systems analyst)
★ Equipment Used: Laser XT/2 XT/3, 386 and Bitcom Computors (IBM Compatiples. (THEORY & PRACTICALS

## 2. Civil Draughtsmanship and Quantity Surveying

★ Qualifiication G C. E (O/L) Duration 6 Months

## 3. City and Guilds of London Exam (Year 94/95)

★ QUANTITY SURVEYING (PART I & II)
★ Qualification: G. C. E. (O/L) Duration: 9 Months
★ Lectures By: Mr. S. Ruthiralingam (Chartered Civil Engineer)

## 4. English Classes

மிகச்சிறந்த வகையில் வகுப்புகள் நடைபெறும். Duration: 4 Months

## 5. TOEFL

(Test of English as a Foreign Language)
Duration: 4 Months

## 6. Short Hand and Typing [English]

## 7. General Motor Mechanism - மோட்டார் வாகனங்கள் திருத்துதல்

மோட்டார் வாகனங்கள் (மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் பம்பி, ஜெனரேற்றர், கார், லொறி என்ஜின்கள்) (பெற்ரோல் டீசல் வாகனம்)

★ Petrol Engine: Ignition System, Operation maintenance and Care Engine Overhauland time setting.
★ Diesel Engine: Fuel injector system, design and Operational details)
அத்துடன் மோட்டார் வாகனங்களின் மின்சார உபகரணங்களை பழுது பார்த்தலும், மின்னேற்றலும், மின்சார இணைப்பும்.
★ Lectures By: Mr. A. S. Gunaseelan (Automobile Engineer) (Duration: 6 Months

## 8. Electrical Wiring - மின்சார இணைப்பு

★ வீட்டு மின்சார இணைப்பு ★ தொழிற்சாலை மின்சார இணைப்பு.
(Single phase & Three phase
Duration: 3 Months

## 9. Motor Rewinding - மோட்டார் ரீவைண்டிங்

★ அடிப்படை மின்னியல், காந்தம், ஆமேச்சர், மின் மாற்றிகள்.
Single phase Motor and Fan, Three phase
Duration: 4 Months

## 10. General Electrician - ஜெனரல் எலெக்ரீஷன்

★ அடிப்படை மின்னியல் (நேரோட்டம், ஆடலோட்டம்)
★ அடிப்படை இலத்திரனியல்
★ நேரோட்ட மின் இயந்திரங்கள், ஆடலோட்ட மின் இயந்திரங்கள் (பழுது பார்த்தல், ரீவைண்டிங்)
★ வீட்டு மின்சுற்று, வாகனங்களுக்கான மின்சுற்று (அமைத்தல், பழுது பார்த்தல், பாதுகாத்தல்)
★ Three Phase (மோட்டார்கள், மின் பிறப்பாக்கிகள்)
★ குளிர்சாதனப் பெட்டி, காற்றுச் சீராக்கி (A. C.), மற்றும் பலவகையான மின்சார உபகரணங்களைப் பற்றி அறிதலும், அவற்றை பழுது பார்க்கும் முறையும்
Duration: 6 Months

குறிப்புகள்:
★ அனைத்து வகுப்புகளும், வார நாள், வார இறுதி நாள் வகுப்புக்களாக நடைபெறும்.
★ பயிற்சிக் கட்டணங்களை தவணை அடிப்படையில் செலுத்தலாம்.
★ விண்ணப்பப் படிவங்களையும், பாட நெறிகளுக்கான கட்டண விபரம், மற்றும் பாடத் திட்டங்களையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்,
**பற்றீஷன் உயர் கல்வி நிறுவனம்,**
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR,
**Patrician Institute of Higher Studies,**
59, St. Patrick's Road,
Jaffna.

(ஏ-3994)

**மணிவாக்கு**

இளமைக்கிலேயே குறிக்கோளைப் பிடித்து பிறருடைய வெறுப்பைத்தான் தேடித் தரும்.

— கன்பூசியஸ்.

# நமது நோக்கு

## அவர்கள் சிந்தனை!

தென் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வி கண்டு தன்னை தொங்கப்போட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த வேளையில் அரசுக்கு ஆலோசனை கூறியிருக்கிறது கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று!

கிழக்கில் நடந்து முடிந்த தேர்தல் முதலாவது படி என்றும், இதனைத் தொடர்ந்து வீதி தெருக்கள் போடுதல், வீட்டு வசதிகள் பெருக்குதல், உணவு விநியோகம், மருத்துவ வசதிகள் போன்றவற்றைத் துரிதகதியில் தொடரவேண்டுமாம்!

யார் இதனை வேண்டாமென்பது? யார் இதனை மறுப்பது? இது அரசின் நாளாந்த நிர்வாகக் கடமை.

ஆலோசனைக்கான காரணமும் தொடர்ந்து விவக்கப்படவில்லை.

மக்கள் நல்வாழ்வுப் பணிகள் செவ்வனே நடைபெற்றால் மக்கள் போராளிகளிடமிருந்து விலகி நிற்பர். பின்னர் போராளிகளை அழிப்பது இலகுவான காரியம்;

இது ஏதோ அடிமுடி தேடிப் புறப்பட்டவர்கள் மிகுந்த சிரமத்தின் பிறகு கண்டுபிடித்த தீர்வுபோல ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் சோற்றுக்காகவா போராடி வருகிறார்கள்?

கண்டுக்கிளிக்குத் தேவை இறகடித்து வெளியே பறந்து திரியும் உரிமையே! கூடுதல் உணவும், கண்டிற்குப் புதுமை பூசுதலும் கிளியின் பிரச்சினைக்கு தீர்வாகுமா?

சபாநாயகர் மும்மது சென்னிலங்கைத் தலைவர்களின் சிந்தனைப் போக்கு மாறவில்லை என்பதைக் கவலைத்தோடு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மனோநிலை இன்னும் மாறவில்லையே எனவும் கவலைதெரிவித்துள்ளார்.

மஹாவம்சச் சிந்தனை யிலிருந்து விடுபட்டு, உலகின் பல்வேறு பகுதிகளில் அரசியல் தீர்வுகள் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்பதை அறிந்து ஏற்றுக்கொள்ள வழிகளைக் காணாதிருப்பது வேதனைக்குரியதே.

வெளிநாடுகளில் எமது இலங்கையின் போக்கு பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றியாவது சிந்திக்காது, பழமை பல்லவியிலே சில தென்னிலங்கைப் பத்திரிகைகள் ஒத்தூதுவது நாட்டுக்கு நன்மை பயக்காதல்லவா?

# விவசாயக் கடன் வழங்குவதில் தமிழ் விவசாயிகள் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகளுக்கு வங்கிகளால் வழங்கப்படும் விவசாயக் கடன்கள் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நிதிவசதி குறைந்த விவசாயிகள் தமது தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ளனர்.

மேலும் தமக்குத் தேவையான உரம், விதை நெல் போன்ற உள்ளீட்டுப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளமுடியாத விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

உற்பத்தி செய்யப்படும் நெல்லைக்கூட அரசாங்கம் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யாமையினாலே குறைந்த விலைக்கே விற்க வேண்டியுள்ளது.

இது விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளை பெரிதும் பாதிக்கிறது. மேட்டு நிலங்களில் பயிர் செய்யும் விவசாயிகளும் இதுபோன்ற சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனிடையே இப்பகுதிகளில் பெருமளவு நெற்பயிர் பிரதேசங்கள் பயிர் செய்யப்படாது தரிசு நிலங்களாக உள்ளன.

இன்று ஒரு சில தமிழ் விவசாயிகளே நெற்செய்கையில் ஈடுபட்டதும் பெருமளவு நிலங்களில் அரசமானிய உதவியுடன் சிங்களவர், முஸ்லீம்களால் பயிர் செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது. -வி

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மருதடி அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோவில் புதிய சித்திரத் திருமஞ்ச வெள்ளோட்ட விழா இன்று 15-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு இடம் பெறும். -ம

## இராசி பலன்

15.4.1994

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு சித்திரை 02)

சதுர்த்தி பி. ப. 1-44 வரை; ரோகிணி மு. இ 9-15 வரை; மரணயோகம் இராகு காலம் பகல் 10-.4 முதல் 12-04 வரை சுபநேரம் காலை 6.04 முதல் 7.04 வரை சங்கடஹர கணபதி சதுர்த்தி விரதம்.

மேடம்; மன வெறுப்பு, தொழில் கஷ்டம், அலைச்சல்.

இடபம்; வசதிகள் அதிகரிப்பு, நண்பர் சகவாசம், தாய்ப்பாசம்.

மிதுனம்; கைக்கோட்டை, நிராசநித்திரை, பிரர்உபகாரம்.

கடகம்; தொழில் உறவு, குடும்ப சுகம், விருந்தோம்பல்.

சிம்மம்; புதிய திட்டம், அதிகார செல்வாக்கு, மன மகிழ்ச்சி.

கன்னி: கஷ்ட ஜீவனம், குடும்ப வேற்றுமை, விரோதிகள் பயம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 04-15 வெள்ளி இரவு

08 01 அன்னை பூபதி நினைவாக சிறப்புநிகழ்ச்சி "புரட்சிப் புயல் பூபதித் தாய்."

08 10 கலைஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் சிறுகதை "விடியலின் பாதையில்" அடுத்து கவிதை "உணர்ந்தான்"

08.30 செய்திகள்

08.40 அரசியல் அரங்கம் "பாரோ விதைத்த வினையை அறுவடை செய்யும் ஆப்கான் மக்கள்"

08.50 வாத்திய கானங்கள்

1994-04-16 சனி காலை

07.02 மாவீர வணக்கம்

(4-ம் பக்கம் பார்க்க)


# அழைப்பு

"போஸ்கோ" நிறுவனத்தின்

ஆதரவுடன்

யாழ். கல்வித்திணைக்களம்

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்

ஆகியவை இணைந்து

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்காக

நடாத்தி வரும்

மெய்வல்லுநர் சட்டவிதிகள் பற்றிய

கருத்தரங்குத் தொடரின்

★ இறுதிநாள் நிகழ்ச்சி ★

காலம்: 16-04-1994

சனிக்கிழமை முற்பகல் 11 மணி

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

தலைவர்: டாக்டர் ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா (தலைவர், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்)

பிரதம விருந்தினர்: பிரபல மெய்வல்லுநர் வீரர் கலாநிதி என். எதிர்வீரசிங்கம்

சிறப்பு விருந்தினர்கள்: திரு. இ. சிவானந்தன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர், தலைவர், யாழ். மாவட்ட பாடசாலைகள் அபிவிருத்திக் குழு)

திரு. வெ. இளங்குமரன் (பொறுப்பாளர், கல்வி மேம்பாட்டுப் பேரவை)

∘° அனைவரும் வருக ∘°

ந. வித்தியாதரன் (செயலாளர், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்)

த. அருணகிரிராஜா (உதவிக் கல்விப்பணிப்பாளர் உடற்கல்வி)

(இ-958)



# AL/96

கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

## புதிய பிரிவு ஆரம்பம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துசமயம் / இந்து நாகரிகம் | — | திரு. சோதி |
| அரசியல் | — | திரு. நவம் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. சத்தியா |

'நிரு' ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.

(ஏ-3993)


1972, 1973

அடையாள அட்டைகளை

## புதுப்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

1972 - 73 - ம் ஆண்டுகளில் பெற்ற தேசிய அடையாள அட்டைகளை புதுப்பிப்பதற்கான கடைசி காலம் இவ்வருடம் நடுப்பகுதியுடன் முடிவடைந்து விடும், என்று நேற்று அரசு அறிவித்தது.

இதுவரை தமது தேசிய அடையாள அட்டைகளைப் புதுப்பிக்காதவர்கள் உடனடியாக தத்தமது கிராமசேவையாளரை சந்தித்து ஆவன நடவடிக்கைகளை எடுக்குமாறு கூறப்பட்டது.

இவ்வருட நடுப்பகுதிக்குப் பின்பு 1994-ம் ஆண்டில் பெற்றுக் கொண்ட தேசிய அடையாள அட்டைகள் புதுப்பிக்கும் வேலைகள் ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டது. (வி - வி)


## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் பவ வருடம் சித்திரை மாதம் 3-ந் திகதி

(16-04-1994) சனிக்கிழமை

காலை 7-05 முதல் 8-05 வரை வரும் சுபவேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரி — திருநிறைச் செல்வி

★ பிருந்தா அவர்கட்கு ★

பூப்புனித நீராட்டு விழா நடாத்த நிச்சயித்திருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

பொ. இராசசேகரம்,
(கணக்காளர், லங்கா எரிபொருள் நிலையம், கொழும்பு)

திருமதி லோகேஸ்வரி இராசசேகரம்,
(ஆசிரியை, வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை)

மாதனை,
பருத்தித்துறை.
(இ-959)

அவ்வண்ணமே விரும்பும் திருமதி மு. விசாலாட்சி (அத்தை)

